உலகம் போற்றும் முதலமைச்சரைக் கண்டு தாய்க்கழகம் பூரிக்கிறது! தமிழகம் முழுவதும் பிரச்சாரக் கூட்டங்கள்!

# மக்களுக்காக மீண்டும் நீங்கள் கோட்டைக்குப் போகவேண்டும்!

## சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு மாநாட்டில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையுரை!

**மறைமலைநகர், அக்.7-**

**உலகம் போற்றும் முதலமைச்சரைக் கண்டு தாய்க்கழகம் பூரிக்கிறது! ‘தலைகுனிய விட மாட்டேன்’ என்ற முதலமைச்சருக்கு ஆயிரம் முத்தங்கள்! என்றும் 2026 ஆம் ஆண்டிலும் நீங்கள் கோட்டைக்குள்ளே போகவேண்டும் - அது உங்களுக்காக அல்ல - எங்களுக்காக அல்ல - மக்களுக்காக! என்றும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு மாநாட்டில் உரையாற்றிய திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டார்.**




செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகரில் 4.10 அன்று நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு மாநாட்டில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமை யுரையாற்றினார்.

அவரது உரை வருமாறு:

எத்தனையோ மாநாடுகள், சுயமரியாதை இயக்கம் தொடங்கும் முன்பும், பின்பும் திராவிட இயக்க வரலாற்றைப் படைத்த மாநாடுகள் என்ற மிகப்பெரிய ஒரு சரித்திரத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு, இன்றைக்கும், நாளைக்கும் “உலகமே பெரியார் மயம் பெரியார் உலக மயம்” என்று லண்டனுக்குச் சென்று, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் தந்தை பெரியார் படத்தைத் திறந்து வைத்து, பெரியார்தான் இனி உலகத்தை ஆளுவார் என்பதைக் காட்டிய எங்கள் ஒப்பற்ற முதலமைச்சர் மானமிகு மாண்புமிகு ‘திராவிட மாடலுடைய’ கதாநாயகர் எவ்வளவு பேர், என்னதான் முயற்சி செய்தாலும், அவர்களால் தோற்கடிக்கப்பட முடியாத ஒரு முதலமைச்சர் வரலாற்றில் இருக்கிறார் என்றால், அவர் இதோ இங்கே சிங்கம் போல் வீற்றிருக்கின்ற எங்கள் முதலமைச்சர்!

எங்கள் முதலமைச்சர் என்று நாங்கள் மட்டும் சொல்லவில்லை; உலகம் சொல்கிறது பாராட்டுகிறது, பயன் பெற்றவர்கள் சொல்கிறார்கள். உங்கள் திட்டத்தைக் கனடா பின்பற்றுகிறது. உங்கள் திட்டத்தை இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள் பின்பற்றுகின்றன என்று சொல்கின்றபோது, எங்களுக்கு ஏற்படுகின்ற பெருமிதத்திற்கு எல்லை இல்லை. தாய்க்கழகம் பூரிக்கிறது. தாய்க்கழகம் சொல்ல வார்த்தைகளைத் தேடுகிறது.

இது சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு மாநாடு மட்டுமல்ல நண்பர்களே!

இங்கே வெள்ளம்போல் திரண்டிருக் கின்றீர்கள். காலையில் நான் உரையாற்றும் போது சொன்னேன்.

### மானத்தைப் பாருங்கள்!

“வானத்தைப் பார்க்காதீர்கள்; தமிழர்களுடைய மானத்தைப் பாருங்கள்” என்று!

இன்றைக்கு வானமும் வழிவிட்டு இருக்கிறது; தமிழர்களுடைய மானமும் அறுதியிடக் கூடிய அளவிற்கு, உங்களுடைய ஆட்சி, நம்முடைய ஆட்சியை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கின்ற, எங்கள் அன்பழைப்பை ஏற்று, உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒப்பற்ற முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் அவர்களே,

அதுபோல, இந்த நிகழ்ச்சியில் சிறப்பாகக் கலந்துகொண்டு வாழ்த்துகின்ற நம்முடைய கொள்கைக் குடும்பத்தில் ஒருவராக இருக்கக் கூடிய தி.மு.க. பொருளாளர் மானமிகு அருமைச் சகோதரர் டி.ஆர்.பாலு எம்.பி., அவர்களே,

திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., அவர்களே,

என்றைக்கும் எங்களுக்குத் தோன்றாத் துணையாக, அவர்களுக்கு வேல் இருக்கிறது என்றால், எங்களுக்கு வேலு இருக்கிறார் என்று சொல்லக் கூடிய அளவிற்குப் பெருமிதத்திற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களே,

ஒரு பெரிய சிறப்பு என்னவென்றால், சுயமரியாதை இயக்கத்தின் 80 ஆம் ஆண்டு விழாவை இதே செங்கல்பட்டில், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடத்தி னோம்.

செங்கல்பட்டு மாநாடு 1929 ஆம் ஆண்டு நடந்தபோது, கலைஞர் அவர்கள் 5 வயதுக் குழந்தை. எங்களைப் போன்றவர்கள் பிறக்காத காலம்.

ஆனால், அதே கலைஞர், பிறகு வந்து, திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி, களத்தில் நின்று, திராவிட இயக்கத்தினுடைய, சுயமரியாதை இயக்கத்தினுடைய தீர்மானத்தை, மகளிருக்கெல்லாம் சொத்துரிமை என்ற தீர்மானத்தை, மகளிருக்கெல்லாம் சம உரிமை என்ற தீர்மானத்தை வடித்துக் காட்டிய பெருமையை திராவிட இயக்க வரலாற்றில் உருவாக்கிய, முதலமைச்சரான கலைஞர் அவர்கள், செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க 80 ஆம் ஆண்டு விழாவில் கலந்துகொண்டார்.

அப்போதும் நம்முடைய அருமை அமைச்சர் சகோதரர் தா.மோ.அன்பரசன் அவர்கள், அன்றைக்கு நடத்தினார். அன்றைக்கும் அமைச்சர் அவர். அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு எங்கள் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர். இன்றைக்கும் நம்முடைய தா.மோ அன்பரசன் அவர்கள் அமைச்சர்.

இதுதான் வரலாறு. “வேரைத் தேடிப் போய் பிடுங்கப் போகிறோம், பிடுங்கப் போகிறோம்” என்று சொல்கிறார்களே, உங்களால் வேரைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாது.

அதுபோலவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற அமைப்புச் செயலாளர் அவருடைய பேச்சு என்றாலே, எல்லோரும் கலங்குவார்கள் அப்படிப்பட்ட சட்ட நிபுணர் வழக்குரைஞர் ஆர்.எஸ். பாரதி அவர்களே,

அதுபோலவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செய்தித்தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களே,

இந்த மாநாட்டினுடைய வெற்றிக்காக அருந்துணையாக இருக்கக்கூடிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் அருமைச் சகோதரர் கருணாநிதி அவர்களே, எஸ்.ஆர்.ராஜா அவர்களே, அன்புத் தோழர் வரலட்சுமி மதுசூதனன் அவர்களே, எப்போதும் சுறுசுறுப்போடு இருக்கக்கூடிய எங்கள் காஞ்சி தந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அவர்களே,

ஒப்பற்ற உழைப்பைத் தங்களுக்குத் தந்து உற்சாகப்படுத்துகின்ற நகர மன்றத் தலைவர் ஜெ.சண்முகம் அவர்களே,

வெள்ளம்போல் திரண்டிருக்கின்ற அத்துணைக் கட்சி நண்பர்களே!

102 வயதாக இருக்கக்கூடியவர், காலையில் இருந்து மாலை வரையில் அமர்ந்திருக்கின்றார் எங்கள் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் ஒப்பற்ற தலைவர் பொத்தனூர் க.சண்முகம் அவர்களே,

அவருடைய மாணவப் பருவத்திலிருந்து ஒரே கொடி, ஒரே கொள்கை, ஒரே தலைவர். இன்றைக்கும் அவர்தான் எங்களுக்கு வழி காட்டுகிறார்.

இப்படி வயது இடைவெளியில்லாமல் திரண்டிருக்கின்ற மகாக்கூட்டம். உங்களையெல்லாம் பார்க்கின்றபோது எனக்குப் பூரிப்பாக இருக்கிறது.

### ஓய்வெடுக்க முடியுமா?

இரண்டு மாதங்களுக்கு முன்பு எனக்கு ஓர் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. அச் சிகிச்சையிலிருந்து இன்னமும் நான் முழுமையாக வெளியே வந்துவிடவில்லை.

மருத்துவர் சொன்னார், “கொஞ்சம் ஓய்வெடுங்கள்” என்று! அதேபோல, மருத்துவர்களுக்கெல்லாம் பெரிய மருத்துவராக இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னைப் பார்த்து “ஓய்வெடுங்கள், ஓய்வெடுங்கள்” என்று சொன்னார்.

அவர் ஓய்வெடுப்பதில்லை. நாங்கள் ஏன் ஓய்வெடுக்கவேண்டும்?

நீங்கள் எதற்காக உழைக்கிறீர்களோ, அதற்காக உங்களைப் பலப்படுத்த நாங்கள் உழைக்கவேண்டாமா?

உங்களை ஏதோ சாதாரணமாக சிலர் நினைக்கிறார்கள். நீங்கள் ஒரு மின்சாரம். மின்மினிப் பூச்சிகளால் உங்களை ஒருபோதும் அசைக்க முடியாது. அதைத்தான் இது போன்ற தொடர் கூட்டங்கள் நிரூபித்துக் கொண்டி ருக்கின்றன.

மின்மினிப் பூச்சிகளை நம்பிக் கொண்டு, சில பேர் வடக்கே இருந்து வந்தவர்கள், “இந்த சந்தர்ப்பமாவது கிடைக்காதா”, என்று “இங்கே ஆழம் பார்க்கலாம்” என்று நினைக்கிறார்கள். நீங்கள் ஆழம் பார்க்கலாம் என்று நினைத்தால், உங்கள் தத்துவத்தை பெரியார் மண் மூடிவிடும்.

அப்படிப்பட்ட ஓர் அருமையான சுயமரியாதை இயக்கத்தை நாம் பெற்றெடுத்திருக்கின்றோம்.

நெஞ்சம் பூரிக்கிறது “பெரியார் உலக மயம் உலகம் பெரியார் மயம்!”

### பதவிக்காக வந்த இயக்கம் அல்ல!

பேசவேண்டிய அவசியமில்லை. அவற்றைக் காட்சிப்படுத்தி இருக்கின்றோம். இங்கே அமைக்கப்பட்டு இருக்கின்ற கண்காட்சிகளைப் பாருங்கள். சுயமரியாதைச் சுடரொளிகளின் பணிகளைப் பாருங்கள்.

இந்த இயக்கம் வெறும் பதவிக்காக வந்த இயக்கமா?

இந்த இயக்கம் பதவிக்காக அல்ல மக்களே ஒடுக்கப்பட்ட மக்களுடைய உதவிக்காக, உயிருக்காக, உரிமைக்காக வந்த இயக்கம். அன்றும் இன்றும் என்றும் இந்த இயக்கம் நிலைக்கும்!

இம்மாநாட்டில் பங்கேற்குமாறு முதலமைச்சர் அவர்களிடம் தேதி வாங்கிவிட்டோம். ஆனால், எனக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற விருக்கிறதே, என்னாகுமோ? என்று ஒரு கவலை இருந்தது.

ஆனால், எனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை; அவர் இருக்கிறார்; இதோ மக்கள் இருக்கிறீர்கள்; இயக்கம் இருக்கிறது, கொள்கை இருக்கிறது.

இந்த மருந்தைவிட, எங்களைக் காப்பாற்ற வேறு எந்த மருந்து மிக முக்கியமானது?

### முதல்வருக்கு ஆயிரம் முத்தங்கள்!

கொள்கை! அந்தக் கொள்கையை விட்டு விட்டு நான் தலைகுனிய மாட்டேன் என்று சொன்னார் அல்லவா!

தலைநிமிர்ந்து இருக்கவேண்டும் என்று சொன்னார் அல்லவா இப்படி ஒரு முதலமைச்சர், தமிழ்நாட்டின் வரலாற்றில், திராவிட இயக்க வரலாற்றில், சவால்களைச் சந்திக்கக் கூடிய ஒரு முதலமைச்சராக, எங்கள் முதலமைச்சர் இருக்கிறாரே உங்களுக்கு ஆயிரம் முத்தங்கள்! ஆயிரம் முத்தங்கள்! ஆயிரம் முத்தங்கள்!

“பெரியார் உலகம் மயம்” உலக மயம் என்பதற்காகத்தான் “பெரியார் உலகம்” நூறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் சித்தரிக்கப்படுகிறது.

நிச்சயமாக, “எங்களால் முடியுமா?” என்று நாங்கள் நினைக்கவில்லை. உங்களால் முடியும்; மக்களால் முடியும்.

ஆகவேதான், உங்களுடைய துணை இருக்கிறது; உங்கள் வழிகாட்டல் இருக்கிறது; உங்களுடைய தோன்றாத் துணை இருக்கிறது.

எதையும் சாதித்துக் காட்டுவோம். நேற்று மாலையில்கூட, அமைச்சர் அவர்கள் உள்பட எல்லாருடனும் பேசிக் கொண்டிருக்கின்ற போது, வானத்தைப் பார்த்தோம்; நான் இன்றைக்குக் காலையில் சொன்னபடி, “வானத்தைப் பார்க்கவேண்டாம்; தமிழ் மக்கள் மானத்தைப் பார்க்கிறோம் அதைக் காப்பாற்றுவது எப்படி என்பதற்காக, சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு மாநாட்டினை நடத்துகிறோம்” அதேநேரத்தில், தமிழ் மண்ணில் அண்மையில் ஊடுருவி இருக்கின்ற ஈனத்தையும் பார்க்கின்றோம்; அதை ஒரு புறத்தில் ஒதுக்கித் தள்ளுவோம்.

அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், முதலமைச்சர் அவர்களுடைய உரையைக் கேட்க நீங்களெல்லாம் எப்படி ஆவலோடு இருக்கிறீர்களோ, அதுபோலத்தான் நானும் ஆவலோடு இருக்கின்றேன்.

நெஞ்சம் நிறைந்திருக்கின்றது. இது பேச வேண்டிய தருணமல்ல; அவரைக் காக்க வேண்டிய தருணம்.

அவரை உற்சாகப்படுத்தவேண்டிய தருணம். அவர் தனி ஒரு நபர் அல்ல என்று காட்டவேண்டிய தருணம்.

### எல்லாமே எங்கள் இடம்!

“கருப்புச் சட்டைக்காரர், காவலுக்குக் கெட்டிக்காரர்” இதைத்தவிர எங்களுக்கு வேலையில்லை.

இந்தக் கூட்டணியில், மற்றவர்களுக்கு எத்தனை இடம்? என்று கேட்பார்கள். ஆனால், எங்களுக்கு எத்தனை இடம்?

எல்லாமே எங்கள் இடம். எல்லாமே உங்கள் இடம்.

எனவேதான், எத்தனை இடம் என்பது முக்கியமல்ல; எத்தனைச் சாதனைகள் செய்து நெஞ்சை உயர்த்தியிருக்கிறீர்கள் இதுதான் தோழர்களே பெருமை அதைத்தான் நாம் நினைக்கவேண்டும்.

எவ்வளவு கட்டுப்பாடான ஒரு தலைமை. இது இன்றைக்கு நேற்றா?

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று அண்ணா சொன்ன மூன்று வார்த்தைகளில், அண்ணா மறைந்த நிலையில், தந்தை பெரியார் நெஞ்சமெல்லாம் பதறி உருகுகிறார். என்னுடைய வீட்டில் தங்கியிருக்கிறார் பெரியார். இரவு 2 மணிக்கு என்னிடம், “எழுதவேண்டும், தாள் கொண்டுவா!” என்றார்.

அண்ணாவிற்கு வீர வணக்கம் செலுத்தி எழுதுகிறார். அதற்கு ஒரு தலைப்புக் கொடுத்தார். யாரும் எதிர்பார்க்காத தலைப்பு “அண்ணா மறைந்தார்; அண்ணா வாழ்க!” என்பதுதான் அத் தலைப்பு.

அதற்கு என்ன அர்த்தம்?

அண்ணா என்ற உருவம் மறைந்திருக்கலாமே தவிர, அண்ணா என்ற தத்துவம், திராவிடம் ஒருபோதும் மறையாது, குறையாது நெஞ்சம் நிறையும் என்று சொன்னார்கள்.

அதற்கடுத்து, கலைஞருக்குக் கட்டளை யிட்டார் தந்தை பெரியார். அந்தக் கட்டளையை ஏற்றுக்கொண்டு முதலமைச்சரனார் கலைஞர் அவர்கள்.

அண்ணா அவர்கள் மறைந்துவிட்டார். கலைஞர்தானே என்று சாதாரணமாக நினைத்தார்கள். ஆனால், கலைஞரோ, “அண்ணாவே பரவாயில்லை” என்று நினைக்க வைத்தார் நம்முடைய இன எதிரிகளை!

கலைஞரும் மறைகிறார்; இது இயற்கை தானே இன்றைக்கு நாங்கள் இருப்போம்; நாளை இல்லாமல் இருக்கலாம். இதுவரையில் விஞ்ஞானம் வயதை நீட்டித்து சாதித்திருக்கிறது. ஒருவேளை இறப்பையும் தவிர்த்தால், வாழ்ந்து காட்டுவோம் அதுதான் விஞ்ஞானம் அது முப்பத்து முக்கோடி தேவர்களால் முடியாது கின்னரர்கள், சிம்புருடர்களால் முடியாது அறிவியல் மூலம்தான் முடியும். அது நடக்கட்டும்!

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

---

### “அதுதான் ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க. ஆட்சி! இதுதான் திராவிடம் – திராவிட மாடல் ஆட்சி!”

வரலாற்றுப் பெருமைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கின்ற ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக - இனி தாய்க்கழகத்திற்கு ஒரே ஒரு பணி (one agenta) ஆறு மதத்திற்கு எங்களுக்கு வேறு பணி இல்லை. அது என்ன பணி தெரியுமா?

எங்களுடைய தலைமையில், அத்துணைக் கருஞ்சட்டை தோழர்களையும், அத்துணைத் தமிழ் உணர்வாளர்களையும், அத்துணைப் பகுத்தறிவாளர்களையும் ஒன்று திரட்டி, ஒரு திட்டத்தை நிறைவேற்ற உள்ளோம்.

அது என்னவென்று சொன்னால், நவம்பர் மாதத்திலிருந்து தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணத் திட்டம் - இதுதான் எங்களுடைய அடுத்த வேலைத் திட்டம் - இதுதான் எங்களுடைய சென்டரி டியூட்டி - இதுதான் எங்களுடைய பாதுகாப்பு வேலை.

என்ன தெரியுமா?

நாடெங்கும் பிரச்சாரம்!

இதனுடன் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஆட்சி! இதுதான் திராவிடம் - திராவிட மாடல் ஆட்சி!

பல இடங்களில் பதில் சொல்வோம். எதிர்ப்புகளைச் சந்திப்போம். அதுதான் இந்த இயக்கத்திற்கு உரமாகும். அதில் ஒரு தலைப்பு என்ன தெரியுமா?

நம்முடைய மக்கள் ஏமாந்துவிடக் கூடாது. எத்தனை நன்மைகளைப் பெற்றாலும், நம்முடைய மக்கள் ஏமாந்துவிடுவார்கள் சில நேரங்களில்.

அப்படி அவர்கள் ஏமாந்துவிடக் கூடாது என்பதற்காக, அவர்களுக்கு விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும் என்பதற்காகத்தான் “இதுதான் ஆர்.எஸ்.எஸ். - இதுதான் பா.ஜ.க. ஆட்சி” என்று ஒரு தலைப்பு.

“இதுதான் திராவிடம் - இதுதான் திராவிட மாடல்” என்பது இன்னொரு தலைப்பு.

இந்தத் தலைப்புகளில் பிரச்சாரக் கூட்டங்கள் ஆறு மாதப் பயணம். 72 திராவிட முன்னேற்றக் கழக மாவட்டங்கள். அதுபோலவே, 69 திராவிடர் கழக மாவட்டங்கள், 234 தொகுதிகள்.

முதல் கட்டம் 90 நாள்கள் பிரச்சாரம்!

முதல் கட்டமாக 90 நாள்கள் பிரச்சாரம் என்னுடைய தலைமையில் தொடர்ந்து நடைபெறும்.

**மாநாட்டில் திராவிடர் கழகத் தலைவர் உரை**